பெயர் :

நாள் :

**பத்தாம் வகுப்பு**

**தமிழ்**

**பயிற்சித்தாள் -1**

**தொகைநிலைத் தொடர்கள்**

### அ. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக:-

1. **பெரியமீசை சிரித்தார்-வண்ணச்சொல்லுக்கான தொகையின் வகை யாது?**

அ) பண்புத்தொகை ஆ) உவமைத்தொகை இ) அன்மொழித்தொகை

ஈ) உம்மைத்தொகை

2. **வேற்றுமை,வினை,பண்பு முதலியவற்றின் உருபுகள் மறைந்து இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட சொற்கள் ஒரு சொல் போல் நிற்பது--------தொடராகும்.**

அ) தொகாநிலை ஆ) வேற்றுமை இ) தொகைநிலை ஈ) எழுவாய்

3. **காலம் கரந்த பெயரெச்சமே---------ஆகும்.**

அ) பண்புத்தொகை ஆ) வினைத்தொகை இ) வினையெச்சம் ஈ) பெயரெச்சம்

4. **எண்ணல்,எடுத்தல்,முகத்தல்,நீட்டல் என்னும் நான்கு அளவுப்பெயர்களைத் தொடர்ந்து வருவது------**

அ) உம்மைத்தொகை ஆ) எண்ணும்மை இ) அளவைப்பெயர் ஈ) உவமைத்தொகை

5. **மார்கழித்திங்கள்,சாரைப்பாம்பு ஆகியசொற்களில் இடம்பெற்ற பொதுப்பெயர்கள்**

அ) மார்கழி,சாரை ஆ) திங்கள்,பாம்பு இ) மார்கழி,பாம்பு ஈ) திங்கள்,சாரை

6. **செங்காந்தள் என்ற தொகைச்சொல்லில் மறைந்து வரும் உருபு**

அ) ஆன ஆ) ஆகிய இ) போன்ற ஈ) ஐ

7. **இருபெயரொட்டுப் பண்புத்தொகையில்-------பெயர் முன்னும்,-------பெயர் பின்னும் வரும்.**

அ) பொது,சிறப்பு ஆ) இடுகுறி,காரணம் இ) காரணம்,இடுகுறி ஈ) சிறப்பு,பொது

8. **வேற்றுமைத்தொகை--------வகைப்படும்.**

அ) 6 ஆ) 7 இ) 8 ஈ) 9

9. **முறுக்குமீசை வந்தார் என்பது------------தொகை**

அ) பண்புத்தொகை ஆ) வினைத்தொகை இ) அன்மொழித்தொகை

ஈ) இருபெயரொட்டுப்பண்புத்தொகை

10. **சிறப்புப்பெயர் முன்னும் பொதுப்பெயர் பின்னும் நின்று இடையில் 'ஆகிய' என்னும் பண்பு உருபு தொக்கி வருவது...........**

அ) அன்மொழித்தொகை ஆ) இருபெயரொட்டுப் பண்புத்தொகை இ) உம்மைத் தொகை

ஈ) உவமைத்தொகை

LIVEWORKSHEETS